செ.கு.எண்: 345 நாள்: 18.9.12

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## "விநாயகர் சதுர்த்தி" திருநாள் வாழ்த்துச் செய்தி

"வேழ முகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்" என்ற வாக்கிற்கு ஏற்ப, முழு முதற் கடவுளாக விளங்கும் விநாயகப் பெருமானின் திருஅவதாரத் திருநாளான விநாயகர் சதுர்த்தியை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நற்காரியங்களைத் தொடங்கும் போது தங்குதடையின்றி சிறப்புடன் நடைபெற விநாயகப் பெருமானை முதலில் போற்றி வணங்குவர். விநாயகரைத் துதித்து நற்காரியங்களை மேற்கொண்டால் வெற்றியே விளையும் என்பது மக்களின் ஏகோபித்த நம்பிக்கை ஆகும்.

எங்கும் நீக்கமற ஒலிக்கின்ற ஓங்கார நாதத்தின் திருவுருவமான விநாயகப் பெருமான் வேண்டுபவர்களுக்கு வேண்டியதை வழங்கி காத்து அருளுபவர். கடிதம் எழுத பிள்ளையார் சுழி, கட்டடத்தில் புக கணபதி ஹோமம், கல்யாணத்தில் மஞ்சள் பிள்ளையார், காவியம் எழுத கணபதி துதி என எல்லாவற்றிலும் முதன்மைக் கொள்ளும் பிள்ளையாரை வணங்கி வழிபடுவோம்.

ஞானமே வடிவான திருமேனியைக் கொண்ட விநாயகப் பெருமானின் திருவருளால் நாடு எங்கும் நலமும், வீடு எங்கும் வளமும் பெருகட்டும் என்று வாழ்த்தி, அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை விநாயக சதுர்த்தி நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை-9**